**தலைப்பு 104 - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 104 - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 12 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 33,219.05 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 22,794.22 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 10,424.83 மில்லியன் அதாவது 31.38 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,025.44 | 1,938.03 | 87.41 | 4.32 |
| மூலதனம் | 31,193.61 | 20,856.19 | 10,337.42 | 33.14 |
| மொத்தம் | **33,219.05** | **22,794.22** | **10,424.83** | **31.38** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 10401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 28.00 | 27.74 | 6.00 | 12.98 | 70.00 | 52.12 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழான 03 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15.66 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0144/000 | 0.09 |
| 6000/0000/00/0013/0099/000 | 13.64 |
| 6000/0000/00/0016/0090/000 | 1.93 |
| **மொத்தம்** | **15.66** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

10401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,848,522 ஆக இருந்தது. அந்த மீதிகள் 01 வருடம் முதல் 16 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அமைச்சு அறவிடுவதற்கு தவறியிருந்தது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொறுப்பில் 86 வாகனங்கள் காணப்பட்டதுடன், அதில் 84 இற்குரிய வாகனப் பதிவுச் சான்றிதழ்களின் பிரகாரம் அவ்வாகனங்களின் உரித்து அமைச்சின் பெயரில் காணப்படவில்லை. மேலும் அமைச்சின் கீழ் உளள்ள உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைக்கப்பட்டிருந்த 107 வாகனங்களில் 105 வாகனங்களினதும் தேசிய தலைமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 10 வாகனங்களினதும் பதிவுச் சான்றிதழ்களின் பிரகாரம் அவ்வாகனங்களின் உரித்து அந்த பிரிவின் பெயரிலோ இந்த அமைச்சின் பெயரிலோ இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலும் 2016 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்படாத முதலாவது தசாப்தம் ''கடன் சுமையிலிருந்து விடுதலை'' என்ற தலைப்பின் கீழ் அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ஊடக அறிவித்தலை வெளியடுவதற்காக முறையே 12,853,800 தொகை மற்றும் ரூபா 26,862,775 தொகை 2016 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. மேலும் அச்செயற்பாடுகள் அமைச்சின் மானிய செயற்பாடுகளுக்குரிய செயற்பாடுகள் அல்ல எனவும் அவதானிக்கப்பட்டன.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 100 டப் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளதார அபிவிருத்தி அமைச்சிற்கு குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு கிடைக்கப் பெற்றிருந்ததுடன், 2016 நவம்பர் 28 ஆந் திகதி அம்முழுத்தொகையும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஊழியர் சேமலாப நிதியத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக்கொள்வனவினை மேற்கொண்டிருக்கவில்லை.

### 3.5 நிதிச் சொத்துக்களை கையேற்றல்

கோல்டன் கீ கடன் அட்டைகள் கம்பனயின் சொத்துக்களை கலைத்தன் பின்னர் பொதுத் திறைசேரிக்கு மீளச் செலுத்தும் அடிப்படையில் 2016 நவம்பர் 03 ஆந் திகதி குறைநிரப்பு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 500 மில்லியன் மேலதிக நிதி ஏற்பாடு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தன. 2016 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 300 மில்லியன் மற்றும் 2016 திசெம்பர் 16 ஆந் திகதி ரூபா 200 மில்லியன் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவு மூலம் கோல்டன் கீ கடன் அட்டைகள் கம்பனி மற்றும் அதனுடன் இணைந்த கம்பனிளின் சொத்துக்களை கலைப்பதற்காக சட்டத்தின் பிரகாரம் உடனடி நடவடிக்கை எடுப்பதற்காகவும் பொதுத் திறைசேரிக்கு மீளச் செலுத்தும் நிபந்தனையின் அமைச்சரவையால் அக்கொடுப்பனவினை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை

கோல்டன் கீ கடன் அட்டைகள் கம்பனியின் பாதுகாப்பு வைப்பு உரிமையாளர்களிடன் வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கு ரூபா 4,989.9 மில்லியன் அமைச்சினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கலைப்பிற்காக சட்ட ரீதியாக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2017 யூன் 12 ஆந் திகதி வரையிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 79 | 62 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 154 | 92 | 62 |
| (iii) | இரண்டாம் நிலை | 241 | 237 | 4 |
| (iv) | ஆரம்ப நிலை | 133 | 113 | 20 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 4 | 1 | 3 |
| | மொத்தம் | **611** | **505** | **106** |

2015 ஆம் ஆண்டின் போது கொள்கை அமுலாக்கல், பொருளதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அமைச்சினால் நபரொருவருக்கு தற்காலிக சாரதி நியமனமொன்று வழங்கப்பட்டிருந்தது. 2015 செப்தம்பர் மாதம் முதல் அந்த ஊழியர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சாரதியாக கடமை புரிந்திருக்கினார். எனினும் 2016 ஆகஸ்ட் மாதம் வரை அமைச்சினால் அந்த தற்காலிக சாரதிக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 337,625 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.